$F_{resultant} = [(4-2)(\cos 30j - \sin 30j) + 1(\cos 60i + \sin 60j)]$

$= \left[2\left(\frac{\sqrt{3}}{2}j - \frac{1}{2}i\right) + \left(\frac{1}{2}i + \frac{\sqrt{3}}{2}j\right)\right]$

$= \left[\left(\sqrt{3} + \frac{\sqrt{3}}{2}\right)j + \left(-i + \frac{1}{2}i\right)\right] = \left[-\frac{1}{2}i + \frac{3\sqrt{3}}{2}j\right]$

$= -\frac{i}{2} + \frac{3\sqrt{3}}{2}j$

$F = -\left(-\frac{i}{2}\right) = \frac{1}{2}i$

$|F| = 0.5\ N$

03. $\vec{A} \times \vec{B} = AB\sin\theta$ Ut'nm $\vec{A} \cdot \vec{B} = AB\cos\theta$

˚L_ědLIThě s [ ħ $|\vec{A} \times \vec{B}| = \sqrt{3}\vec{A} \cdot \vec{B}$ ...(i)

B ] _p $|\vec{A} \times \vec{B}| = |\vec{A}|\,|\vec{B}|\sin\theta = AB\sin\theta$ Ut'nm

$\vec{A} \cdot \vec{B} = |\vec{A}|\,|\vec{B}|\cos\theta = AB\cos\theta$

CR¸ ] NUu T_ě (1)- p ®W ° P

$AB\sin\theta = \sqrt{3}\,AB\cos\theta$

$\tan\theta = \sqrt{3}$

$\therefore \quad \theta = 60°$

C¸ Q LW³ ª ° u TŠ

$|\vec{A} + \vec{B}| = \sqrt{A^2 + B^2 + 2AB\cos 60°}$

$= \sqrt{A^2 + B^2 + 2AB \times \frac{1}{2}}$

$= \left(A^2 + B^2 + AB\right)^{\frac{1}{2}}$

04. ~¸ Pj R[ ì fđ

$R = \frac{u^2 \sin 2\theta}{g} = \frac{30^2 \sin(2 \times 30)}{9.8}$

$= \frac{30 \times 30 \times \sin 60}{9.8} = \frac{30 \times 30 \times \sqrt{3}}{2 \times 9.8}$

$= \frac{450 \times 1.732}{9.8} = 79.52\ m$

07. ~¸ Pj R[ d˚L_Q m $\theta = 30^0$

ª ¸ N˚YLm $v = 30\ ms^{-1}$

ı³ èolı ³ ¸ N IJ ědLm $g = 9.8\ ms^{-2}$

T\dþ mL_Xm

$t_f = \frac{2u\sin\theta}{g} = \frac{2 \times 30 \times \sin 30^0}{9.8}$

$= \frac{60 \times 1/2}{9.8} = \frac{30}{9.8} = \frac{150}{49} = 3.06\ s$

09. ˚L_ědLIThěs [ ħ

$|\vec{A} + \vec{B}| = |\vec{A} - \vec{B}|$

Cĸı\IJmYodLITěj R

$|\vec{A} + \vec{B}|^2 = |\vec{A} - \vec{B}|^2$

$\Rightarrow (\vec{A} + \vec{B}) \cdot (\vec{A} + \vec{B}) = (\vec{A} - \vec{B}) \cdot (\vec{A} - \vec{B})$

$\Rightarrow \vec{A} \cdot \vec{A} + \vec{A} \cdot \vec{B} + \vec{B} \cdot \vec{A} + \vec{B} \cdot \vec{B} = \vec{A} \cdot \vec{A} - \vec{A} \cdot \vec{B} - \vec{B} \cdot \vec{A} + \vec{B} \cdot \vec{B}$

$\Rightarrow \vec{A} \cdot \vec{B} + \vec{A} \cdot \vec{B} = -\vec{A} \cdot \vec{B} - \vec{A} \cdot \vec{B}$

$(\because \vec{B} \cdot \vec{A} = \vec{A} \cdot \vec{B})$

$\Rightarrow 4\vec{A} \cdot \vec{B} = 0$

- $\vec{A}\cdot\vec{B} = 0$

$\vec{A}$ Ut ńm $\vec{B}$ B ~V ˙YdP_oLł dþ C˛ PlThP ˚L_Q m 90é.

12. ˙T_κs A˛ Pijm˙ Tκ U E VWn

$h_{Tκ Um} = \dfrac{u^2 \sin^2 q}{2g} = \dfrac{30^2 \sin^2 30}{2 ¼ 9.8}$

$= \dfrac{900 ¼ (1/2)^2}{2 ¼ 9.8} = \dfrac{225}{19.6} = 11.48$ m

˙Tκ U E VWn = 11.48

14. ~˛ Pj R[ d˚L_Q m = $60^0$

˙NVpTĕ m³ ˛ N = F

~˛ Pj R[ d ŋ ´n = 40 kg wt

F cos q = F cos $60^0$ = 40

$F = \dfrac{40}{\cos 60^0} = \dfrac{40}{1/2} = 40 ¼ 2 = 80$ kg wt

˙Ne þ j ħ j ª˛ N˚YLd ŋ ´n

$F \sin 45^0 = 80 ¼ \dfrac{\sqrt{3}}{2}$

= 40 ¼ 1.732 = 69.28 kg wt

˙Ne þ j ħ j ª˛ Ndŋ ´n = 69.28 kg wt

17. ~˛ Pj R[ ì f đ $R = \dfrac{u^2 \sin 2q}{g}$

˙Tκ U E VWn $h_{Tκ Um} = \dfrac{u^2 \sin^2 q}{2g}$

LQ d~u T§.

$\dfrac{u^2 \sin 2q}{g} = 4\sqrt{3}\,\dfrac{u^2 \sin^2 q}{2g}$

- $\sin 2q = 2\sqrt{3} \sin^2 q$
- $2 \sin q \cos q = 2\sqrt{3} \sin^2 q$
- $\cos q = \sqrt{3} \sin q$
- $\dfrac{1}{\sqrt{3}} = \dfrac{\sin q}{\cos q} = \tan q$
- $\tan q = 1/\sqrt{3}$ (or) $q = \tan^{-1}(1/\sqrt{3}) = 30^0$

\ G˙ ˚L_Q j ª u Uª l ı = $30^0$

19. ~˛ Pj R[ ì f đ $R = \dfrac{u^2 \sin 2q}{g}$

˙Tκ U E VWn $h_{Tκ Um} = \dfrac{u^2 \sin^2 q}{2g}$

LQ d~u T§.

~˛ Pj R[ ì f đ = 3 ˙Tκ U E VWn

$\dfrac{u^2 \sin 2q}{g} = 3\,\dfrac{u^2 \sin^2 q}{2g}$

- $\sin 2q = \dfrac{3}{2} \sin^2 q$
- $4 \sin q \cos q = 3 \sin^2 q$
- $4 \cos q = 3 \sin q$
- $\dfrac{4}{3} = \dfrac{\sin q}{\cos q} = \tan q$

$q = \tan^{-1}(1.3333) = 53^0 17'$

G˙ ˚L_Q j ª u Uª l ı = $53^0 17'$

www.Padasalai.Net

## இயற்பியல் அலகுத் தேர்வு-5

# இயக்க விதிகள்

**வினாக்களின் எண்ணிக்கை: 20]** **[அதிகபட்ச நேரம் : 30 நிமிடங்கள்**

**01.** **6 kg நிறையுடைய பொருளொன்றின் மீது செயல்படும் விசை, அதன் திசைவேகத்தை 3 $ms^{-1}$–லிருந்து 5 $ms^{-1}$–க்கு மாற்றுகிறது. 2 நொடிகளுக்கு விசை செயல்பட்டால் விசையின் தாக்கம்**

(1) 12 Ns (2) 10 Ns

(3) 18 Ns (4) 22 Ns

**02.** **ராக்கெட் விண்வெளியின் மேல்நோக்கி செல்வது**

(1) அது காற்றை விட லேசாக இருப்பதால்

(2) சூரியனின் ஈர்ப்பு விசையால்

(3) தன் எடையைவிட எடையில் அதிகப்படியான காற்றை இடப்பெயர்ச்சி செய்வதற்கான காற்றாடி பொருத்தப்பட்டிருப்பதால்

(4) அடிப்பாகத்திலிருந்து வெளியேற்றப்படும் வாயுக்கள் ராக்கெட்டுடன் மீது செயல்படுத்தும் விசையால்

**03.** **300 m/s திசைவேகம் கொண்ட ராக்கெட்டின் விசை 210 N எனில், ராக்கெட் எரிபொருள் எடுத்து கொள்ளும் வீதம்**

(1) 0.07 kg/s (2) 1.4 kg/s

(3) 0.7 kg/s (4) 10.7 kg/s

**04.** **ஏரியிலும் அதன் அருகாமையிலுள்ள கிணறுகளிலும் உள்ள நீரானது ஒரே மட்டத்தை அடைய முற்படுகிறது. ஏனெனில்,**

(1) நீரின் முரணிய பெருக்கத்தினால்

(2) நீரின் பரப்பு இழுவிசையினால்

(3) புவியீர்ப்பு விசையினால்

(4) ஒரே வளி அழுத்தத்தினால்

**05.** **கீழ்கண்ட வாக்கியங்களை கவனித்து சரியான விடையை தெரிந்தெடு :**

**I. உராய்வு விசை நிறை பொருட்கள் தொடர்பு கொள்ளும் பரப்பின் தன்மை ஆகிய காரணிகளைச் சார்ந்ததல்ல**

**II. பொருளின் நிறை அதிகரித்தால், உராய்வு விசையும் குறையும்**

(1) (I) மற்றும் (II) இரண்டும் உண்மை

(2) (I) மற்றும் (II) இரண்டும் உண்மையல்ல

(3) (I) சரி (II) தவறு

(4) (I) தவறு (II) சரி

**06.** **36 $ms^{-1}$ வேகத்தில் இயங்கும் 150 g நிறையுள்ள கிரிக்கெட் பந்து, மட்டையில் மோதி சென்ற திசையிலேயே மீண்டும் 21 $ms^{-1}$ திசைவேகத்தில் பின்னோக்கி வருகிறது. பந்து மட்டையுடன் 1/20 செ காலத்திற்குத் தொட்டுக்கொண்டிருந்தால் செயல்படுத்தப்பட்ட சராசரி விசை**

(1) 135 N (2) 271 N

(3) 171 N (4) 139 N

**07.** **ஒரு பொருளின் முடுக்கத்திற்குக் காரணம்**

(1) சமன் செய்யப்பட்ட விசை

(2) சமன் செய்யப்படாத விசை

(3) நிலைமின்னியல் விசை

(4) மேற்கண்ட எதுவுமில்லை

**08.** **1000 kg நிறையுள்ள எடை தூக்கும் எந்திரம் 1 $m/s^2$ முடுக்கத்துடன் மேல்நோக்கி இயங்குகிறது எனில் எடைதூக்கும் எந்திரத்துடன் தொடர்புடைய கயிற்றில் உண்டாகும் இழுவிசை**

(1) 9800 N (2) 10,800 N

(3) 11,000 N (4) 10,000 N

**09.** **பூமி சுழல்வதை நிறுத்தினால், அதன் பரப்பின்மேல் -யின் தோற்ற மதிப்பு**

(1) எல்லா இடத்திலும் அதிகரிக்கும்

(2) எல்லா இடத்திலும் குறையும்

(3) எல்லா இடத்திலும் சமமாக இருக்கும்

(4) சில இடங்களில் இதிகரித்தும் மற்று சில இடங்களில் சமமாகவும் இருக்கும்

**10. துப்பாக்கியின் பின்னியக்கத்தை விவரிக்கும் விதி**

(1) நியூட்டனின் முதல் விதி
(2) நியூட்டனின் இரண்டாம் விதி
(3) நியூட்டனின் மூன்றாம் விதி
(4) கெப்ளரின் விதி

**11. 12 N மற்றும் 8 N மதிப்புகள் உடைய இரு விசைகள் ஒரு புள்ளியில் செயல்படுகின்றன. அவைகளுக்கு இடைப்பட்ட கோணம் $60^0$ எனில் தொகுபயன் விசையின் மதிப்பு**

(1) 15.24 N (2) 17.44 N
(3) 13.41 N (4) 11.24 N

**12. நியூட்டனின் மூன்றாவது விதி ........... உள்ள பொருள்களுக்கு பொருந்தும்**

(1) ஓய்வு நிலையில் மட்டும்
(2) இயக்க நிலையில் மட்டும்
(3) ஓய்வு மற்றும் இயக்க நிலை இரண்டிலும்
(4) சமமான நிறை

**13.** (a) **வடகிழக்குத் திசையில் $30^0$ சாய்வாக 20 N**
(b) **வடதிசையில் 25 N**
(c) **வடமேற்குத் திசையில் $45^0$ சாய்வாக 30 N**
(d) **தென்மேற்குத் திசையில் $40^0$ சாய்வாக 35 N**
**மேற்கண்ட விசைகள் ஒரு புள்ளியில் செயல்படும் போது தொகுபயன் விசையின் எண் மதிப்பு, திசை முறையே**

(1) 35.6 N, $114^0 42'$
(2) 25.2 N, $144^0 42'$
(3) 45.6 N, $134^0 42'$
(4) 55.6 N, $234^0 42'$

**14. ஒரு ஜெட் விமான இயந்திரம் வேலை செய்யும் அடிப்படைத் தத்துவம்**

(1) நிறை (2) ஆற்றல்
(3) நேர்கோட்டு உந்தம் (4) கோண உந்தம்

**15. இரண்டு பொருள்கள் 4 : 1 என்ற விகிதத்தில் இயக்க ஆற்றலைப் பெற்று சமமான நேர்கோட்டு உந்தத்துடன் இயங்குகிறது எனில் அவற்றின் நிறைகளின் விகிதம்**

(1) 4 : 1 (2) 1 : 1
(3) 1 : 2 (4) 1 : 4

**16. ராக்கெட் இயங்கும் அடிப்படைத் தத்துவம் எது?**

(1) உந்தத்தின் அழிவின்மை விதி
(2) ஆற்றல் அழிவின்மை விதி
(3) பொருண்மை அழிவின்மை விதி
(4) ஈர்ப்பு விதி

**17. ஒரு பொருளின் இயக்க ஆற்றல் அதிகரிக்கும் வீதம் 300% எனில் அதன் உந்த மாறுபாட்டின் சதவிகிதம்**

(1) 100% (2) 150%
(3) 265% (4) 73.2%

**18. உந்தத்தின் திருப்புத்திறனை எப்படி அழைக்கலாம்?**

(1) கோண உந்தம்
(2) நிலைமத் திருப்புத்திறன்
(3) இயக்க ஆற்றல்
(4) முடுக்கம்

**19. பட்டியல் I–யும் பட்டியல் II–யும் பொருத்தி சரியான விடையைத் தெரிந்தெடு :**

| பட்டியல்–I | பட்டியல்–II |
|---|---|
| (a) விசை | i. 1643 |
| (b) உந்தம் | ii. $Kgms^{-1}$ |
| (c) கலிலியோ | iii. 1564 |
| (d) நியூட்டன் | iv. நியூட்டன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | iv | ii | iii | i |
| (2) | ii | iii | iv | i |
| (3) | iii | ii | iv | i |
| (4) | iii | iv | ii | i |

**20. ஒரு பொருளின் நிறையும் திசைவேகமும் இணைந்து உருவாகும் இயற்பியல் அளவு**

(1) விசை (2) வேலை
(3) எந்திரலாமல் (4) உந்தம்

| இயற்பியல் அலகுத்தேர்வு 05–க்குரிய விடைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01**...(1) | **02**...(4) | **03**...(3) | **04**...(3) | **05**...(2) | **06**...(3) | **07**...(2) | **08**...(2) |
| **09**...(1) | **10**...(3) | **11**...(2) | **12**...(3) | **13**...(3) | **14**...(3) | **15**...(4) | **16**...(1) |
| **17**...(1) | **18**...(1) | **19**...(1) | **20**...(4) | | | | |

## குறிப்புகள் மற்றும் விளக்கமான விடைகள்(இயற்பியல் அலகுத்தேர்வு–05)

01. பொருளின் நிறை m = 6 kg

ஆரம்பத் திசைவேகம் $u = 3\ ms^{-1}$

இறுதித் திசைவேகம் $v = 5\ ms^{-1}$

விசை செயல்படும் காலம் t = 2 s

செயல்படும் விசையின் அளவு,

$$F = \frac{-}{\ } = \frac{4(5-3)}{2} = \frac{6\times 2}{2} = 6\ N$$

விசையின் தாக்கம் = விசை × காலம்

$= 6\times 2 = 12$ Ns

விசையின் தாக்கம் = 12 Ns

03. = —— (மேல்நோக்கி)

ராக்கெட் எரிபொருள் எடுத்துகொள்ளும் வீதம்

—— = —

$F_t = 210$ N, $v_r = 300$ m/s

$\therefore$ —— $= \frac{210}{\ } = 0.7\ kg/s$

06. கிரிக்கெட் பந்தின் நிறை $m = 150g = 150\times 10^{-3}$ kg

பந்தின் ஆரம்பத் திசைவேகம் $u = 36\ ms^{-1}$

பந்தின் இறுதித் திசைவேகம் $v = -21\ ms^{-1}$

பந்து மட்டையுடன் தொட்டுக் கொண்டிருந்த காலம்

t = 1/20 s

பந்து அடையும் உந்த மாற்றம்

= mv – mu

$= 150\times 10^{-3}[36-(-21)]$

$= 15\times 10^{-2}\times 57 = 8.55\ kg\ ms^{-1}$

செயல்படுத்தப்பட்ட சராசரி விசை

= உந்த மாற்றம் / காலம்

$= 8.55/(1/20) = 8.55\times 20 = 171$ N

சராசரி விசை = 171 N

08.




$T - mg = ma$

or $T = m(g + a)$

$m = 1000$ kg, $a = 1\ m/s^2$, $g = 9.8\ m/s^2$

$T = 1000\ (9.8 + 1)$

$= 1000\times 10.8 = 10800$ N

11. முதல் விசை, P = 12 N

மற்றொரு விசை, Q = 8 N

விசைகளுக்கிடையேயான கோணம் $\theta = 60^0$

தொகுபயன் விசையின் மதிப்பு

$$R = \sqrt{P^2 + Q^2 + 2PQ\cos\theta}$$

$$= \sqrt{144 + 8^2 + 2\times 12\times 8\times \cos 60^0}$$

$$= \sqrt{144 + 64 + 2\times 12\times 8\times (1/2)}$$

$$= \sqrt{\ } = 17.44\ N$$

$\therefore$ தொகுபயன் விசையின் மதிப்பு = 17.44 N

13. $F_{1x} = F_1 \cos\theta_1$

$= 20\cos 30^0 = 20 \times \frac{\sqrt{\ }}{2} = 10\times 1.732 = 17.32$ N

$F_{2x} = F_2\cos\theta_2 = 25\cos 90^0 = 0$

$F_{3x} = F_3\cos\theta_3 = 30\cos 135^0$

$= -30 \cos 45^0 = -30 \times \frac{1}{\sqrt{2}} = -21.21$ N

$F_{4x} = F_4 \cos\theta_4 = 35 \cos 220^0$

$= -35 \times \cos 40^0 = -35 \times 0.7660 = -26.80$ N

$R_x = F_{1x} + F_{2x} + F_{3x} + F_{4x}$

$= 17.32 + 0 - 21.21 - 26.80 = -30.69$ N

$F_{1y} = F_1 \sin\theta_1 = 20 \sin 30^0 = 20 \times \frac{1}{2} = 10$ N

$F_{2y} = F_2 \sin\theta_2 = 25 \sin 90^0 = 25 \times 1 = 25$ N

$F_{3y} = F_3 \sin\theta_3 = 30 \sin 135^0$

$= 30 \cos 45 = 30 \times \frac{1}{\sqrt{2}} = 21.21$ N

$F_{4y} = F_4 \sin\theta_4 = 35 \sin 220^0$

$= -35 \times \sin 40^0 = -35 \times 0.6428 = -22.50$ N

$R_y = F_{1y} + F_{2y} + F_{3y} + F_{4y}$

$= 10 + 25 + 21.21 - 22.50 = 33.71$ N

$R = \sqrt{R_x^2 + R_y^2} = \sqrt{(-30.69)^2 + (33.71)^2}$

$= \sqrt{941.9 + 1136} = \sqrt{2077.9}$

$= 45.59$ N $= 45.6$ N

$\tan\theta = \frac{R_y}{R_y} = -\frac{33.71}{30.69} = -1.0093$

$-\tan\theta = \tan(180 - \theta)$

$= 180^0 - \tan^{-1}(1.0986) = 180^0 - 45^0 18' = 134^0 42'$

தொகுபயன் விசை $= 45.6$ N

தொகுபயன் பயன் திசை $= 134^0 42'$

15. m நிறையும் v திசைவேகமும் கொண்ட பொருளின் இயக்க ஆற்றல்

$= \frac{1}{2} \quad ^2$

அதனுடைய நேர்கோட்டு உந்தம்

p = mv

$\therefore \quad = \frac{1}{2} \quad ^2$

or $\quad = \frac{^2}{2}$

$\therefore \quad \frac{1}{2} = \frac{^2_1}{2_1} \times \frac{2}{^2_2} \quad ^2$

ஆனால் $p_1 = p_2$ (கொடுக்கப்பட்டுள்ளது)

So, $\frac{1}{2} = \frac{2}{1}$

or $\frac{1}{2} = \frac{2}{1} \quad 1$

எனவே $m_1 : m_2 = 1 : 4$

17. இயக்க ஆற்றலுக்கும் உந்தத்திற்கும் உள்ள தொடர்பு

$= \frac{1}{2}(\quad ^2)$

இயக்க ஆற்றல்

$= \frac{1}{2}(\quad ^2)$

or $= \sqrt{2}$

இயக்க ஆற்றல் அதிகரிக்கும் விதம் 300% எனில் உந்தத்தின் மாறுபாடு p .

புதிய இயக்க ஆற்றல்

$= \quad + \frac{}{100} \quad =$

உந்தம் மாறுபாடு

$' = \sqrt{2 \quad \times 4} = 2\sqrt{2} \quad = 2$

$\frac{\Delta}{} \times 100 = \frac{-}{} \times 100\%$

$= \frac{}{} - 1 \times 100\% = \frac{2}{} - 1 \times 100\% = 100\%$

உந்த மாறுபாட்டின் சதவிகிதம் 100%

# இயற்பியல் அலகுத் தேர்வு-6

## வேலை, ஆற்றல் மற்றும் திறன்

வினாக்களின் எண்ணிக்கை: 20] [அதிகபட்ச நேரம் : 30 நிமிடங்கள்

01. 30 m உயரத்திலிருந்து 10 $ms^{-1}$ திசைவேகத்தில் பந்து ஒன்று கீழ்நோக்கி வீசப்படுகிறது. பந்து தரையில் மோதும் திசைவேகம்
(1) 16.63 m/s (2) 36.61 m/s
(3) 46.13 m/s (4) 26.23 m/s

02. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு
(a) விசை செயல்படும் புள்ளியானது, விசையின் திசையில் அல்லது விசைக்கு நேர்த்திசையில் நகர்ந்தால், அவ்விசை அல்லது அவ்விசையை எதிர்த்து வேலை செய்யப்பட்டது என இயற்பியலில் கூறப்படும்.
(b) விசையானது, இயக்கத்தை அல்லது இடப் பெயர்ச்சியை ஏற்படுத்த வேண்டும்.
(c) துகள் ஒன்றின் மீது செயல்படுத்தப்படும் விசை F மற்றும் துகள் அடைந்த மிகச்சிறிய இடப்பெயர்ச்சி ds எனில், விசை செய்த வேலை dw = .
(d) மிகச்சிறிய இடப்பெயர்ச்சியின்போது, விசை செய்த வேலை என்பது இடப்பெயர்ச்சி ds மற்றும் இடப்பெயர்ச்சியின் திசையில் விசையின் கூறு $F\cos\theta$ ன் பெருக்கற் பலனுக்குச் சமம்.
ஆப்ஷன் :
(1) (a), (b) மற்றும் (c) தவறு
(2) (b), (c) மற்றும் (d) தவறு
(3) (a) மட்டும் தவறு
(4) (a), (b) மற்றும் (d) தவறு

03. ஒரு மனிதன் பூமியின் பரப்பிலிருந்து உந்திக் குதிக்கும் போது அடையும் உயரத்தை விடச் சந்திரனின் பரப்பில் உந்திக் குதிக்கும் போது உயரம் அதிகமாவதன் காரணம்
(1) சந்திரனின் பரப்பு சுரசுப்பானது
(2) சந்திரனில் வெப்ப நிலை குறைவு
(3) சந்திரனை சுற்றி வளி மண்டலம் இல்லை
(4) சந்திரனின் மேற்பரப்பில் புவிஈர்ப்பு முடுக்கம் குறைவு

04. நிறை–ஆற்றல் இணைமாற்று பொருந்துவது
(1) இயக்க ஆற்றலுக்கு மட்டும்
(2) நிலை ஆற்றல் மற்றும் இயக்க ஆற்றலுக்கு
(3) கதிர்வீச்சு ஆற்றல் மற்றும் மின்காந்த ஆற்றல்
(4) இயக்க ஆற்றல், நிலை ஆற்றல், கதிர்வீச்சு ஆற்றல் மற்றும் மின்காந்த ஆற்றலுக்கு

05. 2 kg மற்றும் 5 kg நிறைகள் சமமான இயக்க ஆற்றலுடன் இயங்கினால், அவற்றின் உந்தங்களின் தகவு
(1) 0.2321 (2) 0.4325
(3) 0.4322 (4) 0.6325

06. வாகனங்களின் சக்கரங்களுக்கு சரியான அளவில் காற்றடிப்பதன் நோக்கம் யாது?
(1) தடையற்ற சுலபமான ஓட்டத்திற்காக
(2) வாகனங்களில் அதிக எடை எடுத்து செல்ல
(3) வழுக்குதலை தவிர்க்கவும் உராய்வைக் குறைக்கவும்
(4) விரைந்து செல்லும் எரிபொருளை சேமிக்கவும்

07. கீழ்கண்ட வாக்கியங்களை கவனித்து சரியான விடையை தெரிந்தெடு :
I. பொருள் ஒன்றை நகர்த்த அல்லது இடப்பெயர்ச்சி செய்ய பயன்படும் ஆற்றல் நிலை ஆற்றல் எனப்படும்.
II. பொருள் ஒன்று அதன் நிலையைப் பொறுத்து அல்லது அதன் திரிபைப் பொறுத்து பெற்றுள்ள ஆற்றல் நிலை ஆற்றல் எனப்படும்.
(1) (I) மற்றும் (II) இரண்டும் உண்மை
(2) (I) மற்றும் (II) இரண்டும் உண்மையல்ல
(3) (I) சரி (II) தவறு
(4) (I) தவறு (II) சரி

08. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு

(a) வேலை செய்யும் திறமையை (capacity) ஆற்றல் என வரையறுக்க முடியும்.

(b) இயந்திர ஆற்றல், வெப்ப ஆற்றல், மின்னாற்றல், வேதி ஆற்றல், ஒளி ஆற்றல், அணுக்கரு ஆற்றல் என ஆற்றல் பல வகைகளாக உள்ளது.

(c) பொருளின் நிலையினால் அல்லது இயக்கத்தினால் அது பெற்றுள்ள ஆற்றல் இயந்திர ஆற்றல் எனப்படும்.

(d) பொருளின் இயந்திர ஆற்றல், நிலை ஆற்றல் மற்றும் இயக்க ஆற்றல் என இரு வகைப்படும்.

ஆப்ஷன் :

(1) (a), (b) மற்றும் (c) சரி

(2) (b), (c) மற்றும் (d) சரி

(3) (a) மட்டும் தவறு

(4) மேற்கண்ட அனைத்தும் சரி

09. 300 kg மற்றும் 200 kg நிறையுடைய இரு பொருள்கள், உராய்வற்ற கிடைத்தளத்தில் 50 $ms^{-1}$ மற்றும் 100 $ms^{-1}$ திசைவேகங்களுடன் ஒன்றையொன்று நோக்கி இயங்குகின்றன. முழு மீட்சி மோதல் ஏற்படின் ஒவ்வொன்றின் இறுதித் திசைவேகங்கள் முறையே

(1) $-40$ m/s, 70 m/s (2) $-60$ m/s, 70 m/s

(3) $-70$ m/s, 80 m/s (4) $-60$ m/s, 70 m/s

10. நிலாவிலிருந்து பூமிக்கு கொண்டு வரப்பட்ட ஒரு பொருளின்

(1) எடை குறையும், நிறை அதிகரிக்கும்

(2) எடை அதிகரிக்கும், நிறை குறையும்

(3) எடை மற்றும் நிறையில் மாற்றம் இருக்காது

(4) எடை அதிகரிக்கும், நிறையில் மாற்றம் இருக்காது

11. ஈர்ப்பு மாறிலி G–யின் மதிப்பு

(1) $3.766 \times 10^{-11}$ நி/மீ$^{-2}$

(2) $6.673 \times 10^{-11}$ நி/மீ$^{-2}$ கி.கி$^{2}$

(3) 980 நி/மீ$^{2}$

(4) 9.8 மீ/செ

12. ஒரு அலை ஓரிடத்திலிருந்து வேறு ஒரு இடம் செல்லும் பொழுது அது எடுத்துச் செல்வது

(1) பொருள் (2) ஆற்றல்

(3) நிறை (4) ஒன்றுமில்லை

13. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு

(a) பொருளின் இயக்கத்தைப் பொருத்து, அது பெற்றுள்ள ஆற்றல் இயக்க ஆற்றல் ஆகும்.

(b) பொருளொன்று ஓய்வுநிலைக்கு வருமுன், செயல்படும் விசைகளுக்கு எதிராக, அது செய்யக்கூடிய வேலையின் அளவாக இயக்க ஆற்றல் அளவிடப்படுகிறது.

(c) கீழே விழும் பொருள், துப்பாக்கியிலிருந்து வெளியேறும் குண்டு, அலைவுறும் ஊசல் போன்றவை நிலை ஆற்றலைப் பெற்றுள்ளன.

(d) நகரும் பொருள், வேலையைச் செய்யக்கூடியதாகும். ஆனால், வேலையைச் செய்யும்போது, பொருளின் திசைவேகம் அதிகமாகும்.

ஆப்ஷன் :

(1) (a), (b) மற்றும் (c) தவறு

(2) (c) மற்றும் (d) தவறு

(3) (a) மட்டும் தவறு

(4) (a), (b) மற்றும் (d) தவறு

14. முறுக்கிவிடப்பட்ட கடிகாரவில்லில் உள்ள ஆற்றல்

(1) இயக்க ஆற்றல் (2) நிலை ஆற்றல்

(3) உராய்வு ஆற்றல் (4) வெப்ப ஆற்றல்

15. 8 $ms^{-1}$ வேகத்தில் இயங்கும் மோட்டார் படகு ஒன்றிற்கு, நீர் ஏற்படுத்தும் தடை 2000 N எனில், எஞ்சினின் திறன்

(1) 1600 W (2) 1200 W

(3) 16000 W (4) 13000 W

16. பூமியின் சுழலும் வேகம் அதிகரித்தால் பொருளின் எடை

(1) அதிகரிக்கும் அல்லது குறையும்

(2) அதிகரிக்கும்

(3) குறையும்

(4) மாறாமல் இருக்கும்

**17. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு**

**(a) மோதலின் போது, அமைப்பின் இயக்க ஆற்றல் மாறாமல் இருப்பின், அம்மோதல் மீட்சி மோதல் எனப்படும்.**

**(b) அணுக்கருத் துகளுக்கிடையேயான மோதல் பொதுவாக, மீட்சியற்ற மோதலாகும்.**

**(c) மீட்சி மோதலில் அமைப்பின் நேர்க்கோட்டு உந்தமும் இயக்க ஆற்றலும் மாற்றமடையும்**

**(d) இரு பொருள்களும் மோதலுக்குப் பிறகு நேர்க்கோட்டில் இயங்கினால், அம்மோதல் ஒரு பரிமாண மோதலாகும்.**

**ஆப்ஷன் :**

(1) (b) மற்றும் (c) தவறு

(2) (b), (c) மற்றும் (d) தவறு

(3) (a) மட்டும் தவறு

(4) (a), (b) மற்றும் (d) தவறு

**18. ஒரு பொருள் மீது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விசைகள் செயல்படும் போது அதே விளைவை ஏற்படுத்தும் ஒரே விசை அவ்விசைகளின்**

(1) தொகுபயன்

(2) இரட்டை

(3) விசையின் திருப்புத்திறன்

(4) செலுத்தப்பட்ட விசை

**19. வெப்பஆற்றலை மின்ஆற்றலாக மாற்றும் கருவி**

(1) மின்மாற்றி (2) வெப்ப மின் இரட்டை

(3) மின்வெப்பக்கருவி (4) மின்னியற்றி

**20. 60 kg நிறையுள்ள ஒருவர் 3 m உயரத்திலுள்ள மாடிப்படிகளை 4 நொடிகளில் ஏறிக்கடக்கிறார். அவரால் ஏற்படுத்தப்பட்ட திறன்**

(1) 441 W (2) 363 W

(3) 223 W (4) 648 W

| **இயற்பியல் அலகுத்தேர்வு 06–க்குரிய விடைகள்** | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01**...(4) | **02**...(3) | **03**...(4) | **04**...(4) | **05**...(4) | **06**...(3) | **07**...(4) | **08**...(4) |
| **09**...(3) | **10**...(4) | **11**...(2) | **12**...(2) | **13**...(2) | **14**...(2) | **15**...(3) | **16**...(3) |
| **17**...(1) | **18**...(1) | **19**...(2) | **20**...(1) | | | | |

## குறிப்புகள் மற்றும் விளக்கமான விடைகள் (இயற்பியல் அலகுத்தேர்வு–06)

01. பந்தின் ஆரம்பத் திசைவேகம் $u = 10\ ms^{-1}$

பந்து விழும் உயரம் $h = 3\ m$

புவிஈர்ப்பு விசை முடுக்கம் $g = 9.8\ m/s^2$

$v^2 = u^2+2gh = 10^2+2\times9.8\times30$

$= 100+588 = 688$

$v = \sqrt{\ } = 26.23\ m/s$

பந்து தரையில் மோதும் திசைவேகம்

$= 26.23\ m/s$

02. (a) விசை செயல்படும் புள்ளியானது, விசையின் திசையில் அல்லது விசைக்கு எதிர்த்திசையில் நகர்ந்தால், அவ்விசை அல்லது அவ்விசையை எதிர்த்து வேலை செய்யப்பட்டது என இயற்பிய–ல் கூறப்படும்.

05. பொருளின் நிறை $m_1 = 2\ kg$

மற்றொரு பொருளின் நிறை $m_2 = 5\ kg$

முதல் பொருளின் இயக்க ஆற்றல்

$= - m_1v_1^2$

மற்றொரு பொருளின் இயக்க ஆற்றல்

$= - m_2v_2^2$

இயக்க ஆற்றல் சமம் என்பதால்

$= - m_1v_1^2 = - m_2v_2^2$

$2v_1^2 = 5v_2^2$

$— = —$ அல்லது $— = \frac{\sqrt{\ }}{\sqrt{\ }}$

உந்தங்களின் தகவு

$$= \frac{\quad}{\quad} = \frac{\sqrt{\;}}{\sqrt{\;}} = \frac{\sqrt{\;}\sqrt{\;}\sqrt{\;}}{\sqrt{\;}\sqrt{\;}\sqrt{\;}}$$

$$= \frac{10\sqrt{2}}{10\sqrt{5}} = \sqrt{\frac{2}{\;}} = \sqrt{0.4} = 0.6325$$

$\therefore$ உந்தங்களின் தகவு $= 0.6325$

09. ஒரு பொருளின் நிறை, $m_1 = 300$ kg

மற்றொரு பொருளின் நிறை, $m_2 = 200$ kg

$m_1$ பொருளின் ஆரம்பத் திசைவேகம், $u_1 = 50$ m/s

$m_2$ பொருளின் ஆரம்பத் திசைவேகம், $u_2 = -100$ m/s

$m_1$ பொருளின் இறுதித் திசைவேகம்,

$$v_1 = \frac{-}{+} u_1 + \frac{2m\ u}{(m\ +m\ )}$$

$$\frac{300-200}{300+200} \times 50 + \frac{2 \times 200 \times -100}{(300+200)}$$

$$= \frac{100 \times 50}{500} + \frac{-40000}{500}$$

$= 10 - 80 = -70$ m/s

$m_2$ பொருளின் இறுதித் திசைவேகம்,

$$v_2 = \frac{2m\ u}{(m\ +m\ )} + \frac{u\ (m\ -m\ )}{(m\ +m\ )}$$

$$\frac{2 \times 300 \times 50}{(300+200)} + \frac{-100(200-300)}{(300+200)} = 60+20 = 80 \text{ m/s}$$

முதல் பொருளின் இறுதித் திசைவேகம் $= -70$ m/s

இரண்டாம் பொருளின் இறுதித் திசைவேகம் $= 80$ m/s

13. (c) கீழே விழும் பொருள், துப்பாக்கியி–ருந்து வெளியேறும் குண்டு, அலைவுறும் ஊசல் போன்றவை இயக்க ஆற்றலைப் பெற்றுள்ளன.

(d) நகரும் பொருள், வேலையைச் செய்யக்கூடியதாகும். ஆனால், வேலையைச் செய்யும்போது, பொருளின் திசைவேகம் குறையும்.

15. நீர் ஏற்படுத்தும் தடை $F = 2000$ N

மோட்டார் படகின் வேகம் $v = 8$ m/s

எஞ்சினின் திறன்

$P = FS/t = Fv$

$= 2000 \times 8 = 16000$ W

எஞ்சினின் திறன் $= 16000$ W

17. (b) அணுக்கருத் துகளுக்கிடையேயான மோதல் பொதுவாக, மீட்சி மோதலாகும்.

(c) மீட்சி மோத–ல் அமைப்பின் நேர்க்கோட்டு உந்தமும் இயக்க ஆற்றலும் மாற்றமடையாது.

20. ஒருவரின் நிறை $m = 60$ kg

மாடிப்படியின் உயரம் $h = 3$ m

ஏறுவதற்கு எடுத்துக்கொண்ட நேரம், $t = 4$ நொடி

புவியீர்ப்பு விசை முடுக்கம் $g = 9.8$ m/s$^2$

ஏற்படுத்தப்பட்ட திறன்

$$P = \frac{FS}{t} = \frac{mgS}{t} = \frac{60 \times 9.8 \times 3}{4} = 441 \text{ W}$$

$\therefore$ ஏற்படுத்தப்பட்ட திறன் $= 441$ W

# இயற்பியல் அலகுத் தேர்வு-7

## துகள் அமைப்பு மற்றும் திண்மப் பொருள்களின் இயக்கம்

வினாக்களின் எண்ணிக்கை: 20] [அதிகபட்ச நேரம் : 30 நிமிடங்கள்

**01.** I = — $MR^2$ என்ற வாய்ப்பாட்டுடன் தொடர்புடைய வரைபடம்

(1)  (2) 

(3)  (4) மேற்கண்ட எதுவுமில்லை

**02.** ஏற்றம் இறக்கம் கருவியில் ஒரு முனையில் 45 kg நிறையுடைய ஒருவரும் மறுமுனையில் 15 kg நிறையுடைய சிறுவனும் அமர்ந்துள்ளனர். அவர்களுக்கிடையே 4 m தொலைவு இருப்பின் சிறுவனிடமிருந்து நிறையின் மையம் அமைந்துள்ள தொலைவு (ஏற்றம் இறக்கம் கருவியின் எடை புறக்கணிக்கத்தக்கது)

(1) 4 m (2) 5 m

(3) 2 m (4) 3 m

**03.** கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு

**(a)** சுழல் இயக்கத்தில், குறிப்பிட்ட அச்சைப் பொருத்து சுழலும் பொருளொன்று, அதன் நிலையில் ஏற்படவேண்டிய மாற்றத்தை எதிர்க்கும்.

**(b)** எதிர்ப்பின் அளவு, பொருளின் நிறையையும் சுழலும் அச்சைப் பொருத்த நிறையின் பரவலையும் (distribution) சார்ந்ததல்ல.

**(c)** சுழல் இயக்கத்தில் நிலைமத்தை, அச்சைப் பற்றிய பொருளின் நிலைமத் திருப்புத்திறன் எனலாம்.

**(d)** நேர்க்கோட்டியக்கத்தில் நிறை ஆற்றும் பங்கினைப் போன்று சுழல் இயக்கத்தில் நிலைமத் திருப்புத்திறன் பங்காற்றுகிறது.

ஆப்ஷன் :

(1) (a), (b) மற்றும் (c) தவறு

(2) (b), (c) மற்றும் (d) தவறு

(3) (b) மட்டும் தவறு

(4) (a), (b) மற்றும் (d) தவறு

**04.** M நிறையும், l நீளமும் கொண்ட ஒரு மெல்லிய சீரான தண்டின் நீளத்திற்குச் செங்குத்தாகவும், ஈர்ப்பின் மையம் வழியே செல்லும் அச்சைப்பற்றிய நிலைமத் திருப்புத்திறன்

(1) $\frac{\times}{\quad}$ (2) $\frac{\times}{\quad}$

(3) $\frac{\times}{\quad}$ (4) மேற்கண்ட எதுவுமில்லை

**05.** 10 cm ஆரமுடைய வட்டத் தட்டு ஒன்றின் நிலைமத் திருப்புதிறன் 0.02 kg $m^2$. அதன் பரப்பின் தொடுகோட்டுத் திசையில் 10 N விசை செயல்படுத்தப்பட்டால், ஏற்படும் கோண முடுக்கத்தைக் கணக்கிடுக.

(1) 250 rad/$s^2$ (2) 50 rad/$s^2$

(3) 100 rad/$s^2$ (4) 10 rad/$s^2$

**06.** 200g நிறையும் 20cm ஆரமும் உடைய வட்டத்தட்டு ஒன்று, அதன் தளத்திற்குச் செங்குத்தாகவும் மையத்தின் வழியாகவும் செல்லும் அச்சைப் பொருத்து, 1 நொடியில் 2 சுழற்சிகளை ஏற்படுத்துகிறது, அதன் இயக்க ஆற்றலைக் கணக்கிடுக.

(1) $3.947 \times 10^{-2}$ J

(2) $3.947 \times 10^{-7}$ J

(3) $1.247 \times 10^{-2}$ J

(4) $7.887 \times 10^{-2}$ J

**07.** கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு

(a) பொருள் தனது ஓய்வு நிலையை அல்லது சீரான இயக்கநிலையைத் தானே மாற்றிக்கொள்ள முடியாத தன்மை நிலைமம் எனப்படும்.

(b) நிலைமம் என்பது பருப்பொருளின் அடிப்படையான பண்பாகும்.

(c) ஒரு குறிப்பிட்ட விசைக்கு, நிறை அதிகமாக இருப்பின், இயக்கத்திற்கான எதிர்ப்பு குறைவாக இருக்கும் அல்லது நிலைமம் குறைவாக இருக்கும்.

(d) நேர்க்கோட்டியக்கத்தில் நிலைமத்தினை பொருளின் நிறை அளவிடுகிறது.

ஆப்ஷன் :

(1) (a), (b) மற்றும் (c) தவறு

(2) (b), (c) மற்றும் (d) தவறு

(3) (c) மட்டும் தவறு

(4) (a), (b) மற்றும் (d) தவறு

**08.** ஈர்ப்புமையத்தின் வழியே சீரான தண்டின் நீளத்திற்குச் செங்குத்து திசையில் உள்ள அச்சுக்கு இணையான மற்றொரு அச்சைப் பற்றிய நிலைமத் திருப்புத் திறன்

(1) —  (2) —

(3) —  (4) மேற்கண்ட எதுவுமில்லை

**09.** L, ω, I என்பன முறையே திண்மப்பொருள் ஒன்றின் சுழலும் அச்சைப்பற்றிய கோண உந்தம், கோணத்திசைவேகம், நிலைமத்திருப்புத்திறன் மதிப்புகள் எனில் அவற்றிற்கிடையே உள்ள தொடர்பு

(1) —  (2) $I = L\omega$

(3) $\omega = IL$  (4) $L = I^2\omega$

**10.** சாடி ஒன்றின் மூடியின் விட்டம் 8 cm. அதனைத் திருப்ப 20 N மதிப்புடைய இரு சம, எதிரெதிர் விசைகள் மூடியின் விளிம்பிற்கு இணையாக செயல்படுத்தப்படுகின்றன. செயல்படுத்தப்பட்ட திருப்பு விசையின் எண் மதிப்பு

(1) 1.2 N m  (2) 1.1 N m

(3) 1.6 N m  (4) 1.3 N m

**11.** 2 kg நிறையும் 0.4m விட்டமும் உடைய மெல்லிய உலோக வளையம் ஒன்று, ஓய்வு நிலையிலிருந்து சாய்வுத் தளத்தில் உருண்டோடி வருகிறது. தளத்தின் அடிப்பகுதியை அடையும்போது வளையத்தின் நேர்க்கோட்டுத் திசைவேகம் 3 $ms^{-1}$ எனில், வளையத்தின் நிலைமத் திருப்புத்திறன் மற்றும் சுழற்சியின் இயக்க ஆற்றல் முறையே

(1) 0.09 kg $m^2$, 12.5 J

(2) 0.8 kg $m^2$, 9 J

(3) 0.09 kg $m^2$, 17.5 J

(4) 9 kg $m^2$, 12.5 J

**12.** M நிறையும், R ஆரமும் உடைய வட்டத்தட்டு ஒன்றின் தளத்தில் தொடுகோட்டைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன்

(1) — $MR^2$  (2) — $MR^2$

(3) — $MR^2$  (4) மேற்கண்ட எதுவுமில்லை

**13.** 100 kg நிறையுடைய திண்ம உருளை ஒன்று அதன் அச்சைப் பொருத்து 200 $s^{-1}$ கோணத் திசைவேகத்துடன் சுழல்கிறது. உருளையின் ஆரம் 0.2 m உருளையின் சுழற்சியுடன் தொடர்புடைய இயக்க ஆற்றல் மற்றும் உருளையின் கோண உந்தத்தின் எண்மதிப்பு முறையே

(1) $2 \times 10^4$ J, 400 kg $m^2$ $s^{-1}$

(2) $4 \times 10^4$ J, 400 kg $m^2$ $s^{-1}$

(3) $4 \times 10^4$ J, 200 kg $m^2$ $s^{-1}$

(4) $3 \times 10^4$ J, 400 kg $m^2$ $s^{-1}$

**14.** M நிறையும், R ஆரமும் உடைய மெல்லிய வட்ட வளையத்தின் விட்டத்தைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன்

(1) — $MR^2$  (2) — $MR^2$

(3) — $MR^2$  (4) மேற்கண்ட எதுவுமில்லை

15. நிறையற்ற தண்டு ஒன்றில் இணைக்கப்பட்ட இரு நிறைகள் அடங்கிய தொகுதி ஒன்று x அச்சில் உள்ளது. x=4m தொலைவில் 0.2kg நிறையும் x=5m தொலைவில் 0.3kg நிறையும் உள்ளன. நிறையின் மையத்தின் x கூறு

(1) 2.4 m (2) 4.6 m
(3) 5.8 m (4) 2.2 m

16. M நிறையும், R ஆரமும் உடைய கோளத்தின் விட்டத்தைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன்

(1) — $MR^2$ (2) — $MR^2$

(3) — $MR^2$ (4) மேற்கண்ட எதுவுமில்லை

17. மோட்டார் ஒன்றில் உள்ள சுழல்சக்கரம், ஓய்வு நிலையிலிருந்து 10 நொடிகளில் 200 rad/s கோணத் திசைவேகத்தை அடைகிறது எனில் கோண முடுக்கம் மற்றும் 10 நொடிகளில் ஏற்படும் கோண இடப்பெயர்ச்சியையும் கணக்கிடுக.

(1) 300 rad (2) 1000 rad
(3) 500 rad (4) 600 rad

18. M நிறையும், R ஆரமும் உடைய மெல்லிய வட்ட வளையத்தின் தளத்திற்குச் செங்குத்தாகவும், மையத்தின் வழியாகவும் செல்லும் அச்சைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன்

(1) — $MR^2$ (2) — $MR^2$

(3) — $MR^2$ (4) $MR^2$

19. 100 g நிறையும் 200 cm நீளமும் உடைய தண்டு ஒன்றின் நீளத்திற்குச் செங்குத்தாகவும் ஈர்ப்பின் மையம் வழியாகவும் செல்லும் அச்சைப் பொருத்த சுழற்சியின் ஆரத்தைக் கணக்கிடுக.

(1) 0.2886 m (2) 0.9886 m
(3) 0.5772 m (4) 0.1886 m

20. 2 kg நிறையுள்ள சக்கரம் ஒன்று நொடிக்கு 6 சுழற்சிகள் மேற்கொள்கிறது. சக்கரத்தின் சுழற்சியின் ஆரம் 0.22 m எனில் சுழல் இயக்க ஆற்றல்

(1) 68.71 J (2) 48.61 J
(3) 82.41 J (4) 35.51 J

**இயற்பியல் அலகுத்தேர்வு 07–க்குரிய விடைகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01**...(3) | **02**...(4) | **03**...(3) | **04**...(4) | **05**...(3) | **06**...(4) | **07**...(3) | **08**...(3) |
| **09**...(1) | **10**...(3) | **11**...(2) | **12**...(2) | **13**...(2) | **14**...(4) | **15**...(2) | **16**...(2) |
| **17**...(2) | **18**...(4) | **19**...(3) | **20**...(1) | | | | |

## குறிப்புகள் மற்றும் விளக்கமான விடைகள் (இயற்பியல் அலகுத்தேர்வு–07)

02. சிறுவனின் நிறை, $m_1$ = 15 kg

பெரியவரின் நிறை, $m_2$ = 45 kg

$x_1$ = 0 m

சிறுவருக்கும், பெரியவருக்கும் இடைத்தூரம்,

$x_2$ = 4 m

நிறை மையம்,

$$x = \frac{m\,x\ +m\,x}{+} = \frac{15\times0+45\times4}{+} = \frac{180}{60} = 3\text{ m}$$

03. (b) எதிர்ப்பின் அளவு, பொருளின் நிறையையும் சுழலும் அச்சைப் பொருத்த நிறையின் பரவலையும் (distribution) சார்ந்தது.

04. M நிறையும், l நீளமும் கொண்ட ஒரு மெல்–ய சீரான தண்டின் நீளத்திற்குச் செங்குத்தாகவும், ஈர்ப்பின் மையம் வழியே செல்லும் அச்சைப்பற்றிய நிலைமத் திருப்புத்திறன்

$\frac{\times}{\quad}$

www.Padasalai.Net

05. திருப்புவிசை

$\tau = F\times 2r = 10\times 2\times 10\times 10^{-2} = 2$ Nm

கோண முடுக்கம் $= \alpha = \frac{\tau}{} = 100$ rad/s$^2$

06. $\omega =$ கோணத் திசைவேகம் $= 2\pi n$

$= 2\pi\times 2 = 4\pi$ rad/s

சுழற்சியின் இயக்க ஆற்றல் $= - I\omega^2$

$= - \times - \times MR^2\omega^2$

$= - \times - \times (0.2)\times (0.2)^2\times (4\pi)^2$

$= 7.887\times 10^{-2}$ J

07. (c) ஒரு குறிப்பிட்ட விசைக்கு, நிறை அதிகமாக இருப்பின், இயக்கத்திற்கான எதிர்ப்பு அதிகமாக இருக்கும் அல்லது நிலைமம் அதிகமாக இருக்கும்.

10. விசையின் மதிப்பு, $F = 20$ N

செங்குத்துத் தொலைவு, $d = 8$ cm $= 8\times 10^{-2}$ m

திருப்புவிசை $\tau = F\times d = 20\times 8\times 10^{-2} = 1.6$ N m

திருப்பு விசை $= 1.6$ N m

11. $I = MR^2 = 2\times (0.2)^2 = 0.08$ kg m$^2$

இயக்க ஆற்றல் $= - I\omega^2$

$\upsilon = r\omega$ ; $\omega = \frac{v}{r}$;

இயக்க ஆற்றல் $= - \times 0.08\times \frac{}{0.2} = 9$ J

13. $I = \frac{MR}{} = \frac{100\times(0.2)}{} = 2$ kg m$^2$

இயக்க ஆற்றல் $= - I\omega^2 = - \times 2\times (200)^2$

$E_R = 4\times 10^4$ J

$L = I\omega = 2\times 200 = 400$ kg m$^2$ s$^{-1}$

14. M நிறையும், R ஆரமும் உடைய மெல்லிய வட்ட வளையத்தின் விட்டத்தைப் பொருத்து நிலைமத் திருப்புத் திறன் $- MR^2$

15. $m_1 = 0.2$ kg, $m_2 = 0.3$ kg,

$x_1 = 4$ m, $x_2 = 5$ m,

$x = \frac{m\ x\ + m\ x}{+} = \frac{(0.2\times 4)+(0.3\times 5)}{(0.2+0.3)} = 4.6$ m

17. சுழல் இயக்கச் சமன்பாட்டிலிருந்து $\omega = \omega_0 + at$

(அல்லது) $\alpha = \frac{\omega - \omega_0}{t} = \frac{200-0}{10} = 20$ rad s$^{-2}$

கோண இடப்பெயர்ச்சி $\theta = \omega_0 t + - \alpha t^2$

$= 0 + - \times 20\times 100 = 1000$ rad

19. நீளத்திற்குச் செங்குத்தாகவும், ஈர்ப்பின் மையம் வழியாகவும் செல்லும் அச்சைப் பொருத்து தண்டின் நிலைமத் திருப்புத் திறன்

$I = MK^2 = \text{——}$ அல்லது $K^2 = \text{——}$ அல்லது

$K = \sqrt{\ } = \sqrt{\ } = 0.5772$ m

20. சக்கரத்தின் நிறை, $M = 2$ kg

சக்கர சுழற்சியின் ஆரம், $R = 0.22$ m

சுழற்சிகளின் எண்ணிக்கை, $n = 6$

சக்கரத்தின் கோணத்திசைவேகம்,

$\omega = 2\pi n = 2\pi\times 6 = 12\pi$ rad / s

சக்கரத்தின் நிலைமத்திருப்புத்திறன்,

$I = MR^2 = 2\times (0.22)^2 = 0.0968$ kg m$^2$

சுழல் இயக்க ஆற்றல் $= - I\omega^2$

$= - \times 0.0968\times (12\pi)^2$

$= 0.0484\times 144\times (3.14)^2 = 68.71$ J

சுழல் இயக்க ஆற்றல் $= 68.71$ J

# இயற்பியல் அலகுத் தேர்வு-8

## ஈர்ப்பியல்

வினாக்களின் எண்ணிக்கை: 20] [அதிகபட்ச நேரம் : 30 நிமிடங்கள்

01. 10 kg மற்றும் 20 kg நிறைகளுடைய இரு கோளங்கள் 5 m இடைவெளியில் உள்ளன. நிறைகளுக்கிடையேயான ஈர்ப்பியல் கவர்ச்சி விசை
(1) $53.36\times10^{11}$ N (2) $43.16\times10^{11}$ N
(3) $63.11\times10^{11}$ N (4) $23.22\times10^{11}$ N

02. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு
(a) இரு பொருள்களுக்கிடையேயான ஈர்ப்பியல் விசையானது, ஒரு செயல்–எதிர்ச்செயல் சோடியாகும்
(b) லேசான பொருள்களுக்கிடையே, ஈர்ப்பியல் விசை அதிகமாக இருக்கும்.
(c) கனமான பொருள்களுக்கு விசை மிகக் குறைவாக இருக்கும்.
(d) சூரியனுக்கும் புவிக்கும் இடையே உள்ள ஈர்ப்பியல் விசை மிக அதிகம்.
ஆப்ஷன் :
(1) (b) மற்றும் (c) தவறு
(2) (b), (c) மற்றும் (d) தவறு
(3) (a) மட்டும் தவறு
(4) (a), (b) மற்றும் (d) தவறு

03. ஒரு பொருள் புவி ஈர்ப்பு விசையிலிருந்து விடுபட்டுச் செல்லத் தேவைப்படும் திசைவேகம்
(1) 8.2 km/s (2) 1.12 km/s
(3) 112.1 km/s (4) இவற்றுள் ஏதுமில்லை

04. புவியின் மையத்திலிருந்து, அதன் விட்டத்திற்குச் சமமான தொலைவில் ஈர்ப்பின் முடுக்கத்தைக் கணக்கிடுக.
(1) 2.15 $ms^{-2}$ (2) 2.45 $ms^{-2}$
(3) 3.45 $ms^{-2}$ (4) 2.85 $ms^{-2}$

05. பொருளின் எடை முழுவதும் செயல்படும் புள்ளி
(1) வடிவ மையம்
(2) ஈர்ப்பு மையம்
(3) பொருள்மையம்
(4) இவற்றுள் ஏதுமில்லை

06. புவியின் ஆரம் 6400 km எனில் 500 km குத்துயரத்தில் ஈர்ப்பியல் முடுக்கம் என்ன?
(1) 8.269 $ms^{-1}$ (2) 5.169 $ms^{-1}$
(3) 7.219 $ms^{-1}$ (4) 6.261 $ms^{-1}$

07. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு
(a) விடுபடு வேகமானது, பொருளின் நிறையைச் சார்ந்தது.
(b) வாயுவில் உள்ள மூலக்கூறுகளின் சராசரித் திசைவேகம், அவ்வாயுவின் தன்மையையும் வெப்ப நிலையையும் சார்ந்ததல்ல.
(c) லேசான வாயுக்களின் திசைவேகங்கள், நிலவின் விடுபடு வேகத்திற்கு ஏறத்தாழ சமமாக இருப்பதால், நிலவில் இருந்து அவை விடுபட்டுச் சென்றுவிடும்.
(d) நிலவின் ஈர்ப்புப்புலம் வலிமை குன்றியதாக உள்ளதால், நிலவில் இவ்வாயுக்கள் தொடர்ந்து இருக்க முடியாது.
ஆப்ஷன் :
(1) (a), (b) மற்றும் (c) தவறு
(2) (b), (c) மற்றும் (d) தவறு
(3) (a) மட்டும் தவறு
(4) (a) மற்றும் (b) தவறு

08. 600 kg நிறையுடைய துணைக்கோள் ஒன்று புவிப்பரப்பிலிருந்து 500 km உயரத்தில் புவியைச் சுற்றுகிறது. அதன் நிலை ஆற்றல்
($M = 6\times10^{24}$ kg ; $R = 6.4\times10^{6}$ m)
(1) $-2.48\times10^{11}$ J (2) $-5.48\times10^{19}$ J
(3) $-3.18\times10^{10}$ J (4) $-3.48\times10^{10}$ J

09. சரியானதைத் தேர்ந்தெடு
(1) ஒரே திசை வேகத்தில் இயங்குகின்ற பொருள்களின் நிறை அதிகரித்தால் உந்தமும் அதிகரிக்கும்
(2) ஒரே நிறையுள்ள பொருள்களின் திசைவேகம் அதிகரித்தால் உந்தமும் அதிகரிக்கும்
(3) மேற்கண்ட இரண்டும் சரி
(4) மேற்கண்ட இரண்டும் தவறு

10. வியாழன் கோளின் நிறை, புவியின் நிறையைப் போல் 318 மடங்கு. மற்றும் அதன் ஆரம் புவியின் ஆரத்தைப்போல் 11.2 மடங்கு எனில் வியாழனின் பரப்பில் பொருளொன்றின் விடுபடு வேகம் (புவியின் விடுபடுவேகம் 11.2 km/s)
(1) 49.62 km/s (2) 39.61 km/s
(3) 59.68 km/s (4) 69.38 km/s

11. நிறையையும் திசை வேகத்தையும் பெருக்கினால் வருவது
(1) உந்தம் (2) முடுக்கம்
(3) விசை (4) இவற்றுள் ஏதுமில்லை

12. புவியின் ஈர்ப்பிலிருந்து விடுபட்டுத் தப்பிச் செல்ல, புவிப்பரப்பில் செங்குத்தாக எறியப்படும் பொருளிற்குக் கொடுக்கப்படவேண்டிய வேகம் ($R = 6.4 \times 10^3$ km; $g = 9.8$ m/s$^2$)
(1) 14.2 km/s (2) 11.2 km/s
(3) 16.2 km/s (4) 10.2 km/s

13. m நிறையுள்ள பொருள் v திசை வேகத்துடன் இயங்கினால் அதன் உந்தம்
(1) $mv^2$ (2) $m^2v$
(3) $mv$ (4) —

14. புவிப்பரப்பிற்கு அருகில் விண்வெளிக் கப்பல் ஒன்று புவியை வட்டப்பாதையில் சுற்றி வருமாறு செலுத்தப்படுகிறது. ஈர்ப்பியல் விசையினின்று விடுபட அந்த விண்வெளிக் கப்பலுக்கு அச்சுற்றுப் பாதையில் கொடுக்கப்பட வேண்டிய கூடுதல் திசைவேகம் (R = 6400 km ; $g = 9.8$ m/s$^2$)
(1) 3.182 km/s (2) 4.182 km/s
(3) 3.282 km/s (4) 5.482 km/s

15. சரியானதைத் தேர்ந்தெடு.
(1) நியூட்டன் மூன்றாம் விதியில் வினை என்பது ஒரு பொருளால் மற்றொரு பொருளின் மீது செலுத்தப்படும் விசை
(2) எதிர்வினை என்பது இரண்டாவது பொருள் முதல் பொருள் மீது செலுத்தும் விசை
(3) வினை செயல்படும் காலத்தில் மட்டுமே எதிர் வினை இருக்கும். வினை முடியும் போது எதிர்வினையும் முடிந்துவிடும்.
(4) மேற்கண்ட அனைத்தும் சரி

16. தனி ஊசலின் அலைவு நேரம் இவற்றைப் பொறுத்து மாறுவதில்லை.
(1) அதன் வீச்சு
(2) ஊசல் குண்டின் நிறை மற்றும் வடிவம்
(3) பொருள்
(4) மேற்கண்ட அனைத்தும்

17. புவியின் ஆரத்தில் (1/4) பங்கும், புவியின் நிறையில் 1/80 பங்கும் உடைய நிலவின் பரப்பில் ஈர்ப்பின் முடுக்கம் ($g = 9.8$ ms$^{-2}$)
(1) 2.16 ms$^{-2}$ (2) 3.91 ms$^{-2}$
(3) 1.96 ms$^{-2}$ (4) 4.36 ms$^{-2}$

18. மேசை மீது வைக்கப்பட்ட பந்தின் சமநிலை
(1) உறுதிச் சமநிலை
(2) உறுதியற்ற சமநிலை
(3) நடுநிலைச் சமநிலை
(4) இவற்றுள் ஏதுமில்லை

19. நியூட்டன் மூன்றாம் விதியில்
(1) வினையும், எதிர்வினையும் இருவேறு பொருள்களில் செயல்படும்.
(2) ஒருபோதும் ஒரே பொருளில் செயல்படுவதில்லை
(3) மேற்கண்ட இரண்டும் சரி
(4) மேற்கண்ட இரண்டும் தவறு

20. புவிப்பரப்பின் மீது பொருளொன்றின் எடை 250N. புவிப்பரப்பிலிருந்து மையம் நோக்கி நான்கில் ஒரு பங்கு ஆழத்தில் அப்பொருளின் எடை (புவியைச் சீரான அடர்த்தி உடைய கோளமாகக் கருதவும்)
(1) 127.4 N (2) 287.4 N
(3) 181.4 N (4) 187.4 N

| இயற்பியல் அலகுத்தேர்வு 08-க்குரிய விடைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01**...(1) | **02**...(1) | **03**...(4) | **04**...(2) | **05**...(2) | **06**...(1) | **07**...(4) | **08**...(4) |
| **09**...(3) | **10**...(3) | **11**...(1) | **12**...(2) | **13**...(3) | **14**...(3) | **15**...(4) | **16**...(4) |
| **17**...(3) | **18**...(3) | **19**...(3) | **20**...(4) | | | | |

## குறிப்புகள் மற்றும் விளக்கமான விடைகள் (இயற்பியல் அலகுத்தேர்வு-08)

01. முதல் கோளத்தின் நிறை, $m_1 = 15$ kg
இரண்டாம் கோளத்தின் நிறை, $m_2 = 45$ kg
இரு கோளங்களுக்கு இடையே உள்ளதூரம், $r = 5$ m
பொது ஈர்ப்பு மாறி-, $G = 6.67\times10^{11}$ Nm$^2$kg$^{-2}$

ஈர்ப்பியல் கவர்ச்சி விசை $F = G\frac{}{}$

$= 6.67\times10^{11}\times\frac{\times}{} = \frac{\times\quad\times}{}$

$= 53.36\times10^{11}$ N

ஈர்ப்பியல் கவர்ச்சி விசை $= 53.36\times10^{11}$ N

02. (b) லேசான பொருள்களுக்கிடையே, ஈர்ப்பியல் விசை மிகக் குறைவாக இருக்கும்.
(c) கனமான பொருள்களுக்கு விசை அதிகமாக இருக்கும்.

04. புவியின் நிறை $=$ Mkg
புவியின் ஆரம் $=$ R m

புவி ஈர்ப்பு முடுக்கம் $g = \frac{GM}{R} = 9.8$ ms$^{-2}$

மாறிய நிலையில், புவியின் தொலைவு $= 2R$ m
இப்போது புவி ஈர்ப்பு முடுக்கம்,

$g' = \frac{GM}{(2R)} = \frac{GM}{4R} = \frac{9.8}{4} = 2.45$ ms$^{-2}$

புவியின் விட்டத்திற்குச் சமமான தொலைவில் புவி ஈர்ப்பு முடுக்கம் 2.45 ms$^{-2}$

06. புவியின் ஆரம் $R = 6400$ km
குத்துயரம் $h = 500$ km
புவி ஈர்ப்பு முடுக்கம் $g = 9.8$ ms$^{-2}$

குத்துயரத்தைச் சார்ந்து,
புவிஈர்ப்பு முடுக்கம்

$g_h = g \quad -\frac{2h}{R} = 9.8\times \quad -\frac{\times}{6400}$

$= 9.8\times \quad -\frac{}{32} = 9.8\times\frac{}{32} = 8.269$ ms$^{-2}$

$\therefore$ குத்துயரத்தில் புவிஈர்ப்பு முடுக்கம் $= 8.269$ ms$^{-1}$

07. (a) விடுபடு வேகமானது, பொருளின் நிறையைச் சார்ந்ததல்ல.
(b) வாயுவில் உள்ள மூலக்கூறுகளின் சராசரித் திசைவேகம், அவ்வாயுவின் தன்மையையும் வெப்ப நிலையையும் சார்ந்தது.

08. துணைக்கோளின் நிறை, $m = 600$ kg
புவியின் நிறை $M = 6\times10^{24}$ kg
துணைக்கோள் சுற்றும் இட உயரம்,
$h = 500$ km $= 5\times10^5$ m
புவியின் ஆரம், $R = 6.4\times10^6$ m $= 64\times10^5$ m
ஈர்ப்பியல் மாறி-, $G = 6.67\times10^{-11}$ N m$^2$ kg$^{-2}$

நிலை ஆற்றல் $E_p = -\frac{GMm}{(R+h)}$

$-\frac{\times\quad^{-11}\times\quad\times\quad^{24}\times}{6.4\times10\quad+5\times10}$

$= -\frac{6.67\times36\times10}{69\times10}$

$= -\frac{6.67\times12\times10}{23} = \frac{80.04}{23}\times10^{10}$

$= -3.48\times10^{10}$ J

10. புவியின் நிறை $=$ M kg
புவியின் ஆரம் $=$ R m
ஈர்ப்பு மாறி- $=$ G Nm kg$^{-2}$

புவியின் விடுபடு திசைவேகம்,

$$v_e = \sqrt{\frac{2GM}{R}} = 11.2 \text{ km/s}$$

வியாழனின் நிறை $M_1 = 318$ M kg

வியாழனின் ஆரம் $R_1 = 11.2$ R m

வியாழனின் விடுபடு திசைவேகம், $= V_e$ km/s

வியாழனின் விடுபடு திசைவேகம்,

$$V_e = \sqrt{\frac{2G(318M)}{11.2R}} = \sqrt{\frac{318}{11.2}}\sqrt{\frac{2GM}{R}}$$

$$= \sqrt{\frac{318}{11.2}\times 11.2} = \sqrt{318\times 11.2} = 59.68 \text{ km/s}$$

∴ வியாழனின் விடுபடு திசைவேகம் = 59.68 km/s

12. புவியின் ஆரம் $R = 6.4\times 10^3$ km $= 64\times 10^5$ m

புவி ஈர்ப்பு முடுக்கம் $g = 9.8 \text{ ms}^{-2}$

புவியின் விடுபடு திசைவேகம், $v_e = \sqrt{2gR}$

$$= \sqrt{2\times 9.8\times 64\times 10}$$

$$= \sqrt{2\times 2\times 49\times 64\times 10^4}$$

$$= 2\times 7\times 8\times 10^2 = 11200 \text{ m/s}$$

$$= 11.2 \text{ km/s}$$

∴ புவியின் விடுபடு திசைவேகம் = 11.2 km/s

14. விண்வெளிக்கப்பல் சுற்றிவரும் பாதையின் ஆரம்,

$R = 6400$ km $= 64\times 10^5$ m

புவி ஈர்ப்பு முடுக்கம் $g = 9.8 \text{ m/s}^2$

விண்வெளிக் கப்ப-ன் விடுபடு வேகம்,

$$v_e = \sqrt{gR}$$

$$= \sqrt{9.8\times 64\times 10^5} = \sqrt{98\times 64\times 10^4}$$

$$= \sqrt{49\times 2\times 64\times 10^4} = 7\times 8\times 1.414\times 10^2$$

$$= 5600\times 1.414$$

$$= 7918 \text{ m/s} = 7.918 \text{ km/s}$$

புவியின் விடுபடு திசைவேகம் = 11.2 km/s

கொடுக்க வேண்டிய கூடுதல் திசைவேகம்

$= 11.2 - 7.918 = 3.282$ km/s

கொடுக்கப்பட வேண்டிய கூடுதல் திசைவேகம்

$= 3.282$ km/s

17. புவியின் நிறை = M kg,

புவியின் ஆரம், = R m

நிலவின் நிறை, M' = (1/80) M kg

நிலவின் ஆரம், R' = (1/4) R m

புவியில் ஈர்ப்பின் முடுக்கம், $g = 9.8 \text{ ms}^{-2}$

நிலவில் ஈர்ப்பின் முடுக்கம், $= g'$

புவியில் ஈர்ப்பின் முடுக்கம், $g = \frac{GM}{R} = 9.8$

நிலவில் ஈர்ப்பின் முடுக்கம்,

$$g' = \frac{GM'}{R'} = \frac{G\frac{M}{80}}{\frac{R}{4}} = \frac{G\frac{M}{80}}{\frac{R}{}}$$

$$= \frac{16GM}{80R} = \frac{9.8}{} = 1.96 \text{ ms}^{-2}$$

நிலவின் பரப்பில் ஈர்ப்பின் முடுக்கம்

$g' = 1.96 \text{ ms}^{-2}$

20. புவிப்பரப்பின் மீது பொருளொன்றின் எடை W = 250 N

புவியின் நிறை = M kg

புவி ஈர்ப்பு முடுக்கம் $= 9.8 \text{ m/s}^2$

பொருளின் நிறை M $\frac{W}{g}$ $\frac{250}{9.8}$ 25.5 kg

புவியின் ஆரம் = R m

புவியின் மையம் நோக்கி ஆழம் d = R/4 m

R/4 ஆழத்தில், ஈர்ப்பு முடுக்கம், $= W_d$

d மீட்டர் ஆழத்தில், ஈர்ப்பு முடுக்கம்,

$$g' = g \; -\frac{d}{R} = g \; -\frac{\frac{R}{4}}{R}$$

$$= g\times\frac{3}{4} = 9.8\times\frac{3}{4} = \frac{29.4}{4} = 7.35 \text{ m/s}^2$$

d மீட்டர் ஆழத்தில் பொருளின் எடை,

$M\times g' = 25.5\times 7.35 = 187.4$ N

குறிப்பிட்ட ஆழத்தில் பொருளின் எடை = 187.4 N

# இயற்பியல் அலகுத் தேர்வு-9

## திண்மங்களின் எந்திரவியல் பண்புகள்

வினாக்களின் எண்ணிக்கை: 20] [அதிகபட்ச நேரம் : 30 நிமிடங்கள்

**01. 40 mm பக்கம் கொண்ட தாமிரத்தாலான திண்ம கன சதுரத்தில் $2\times10^{7}$ Pa அழுத்தம் செயல் படுவதனால் அதன் பருமனில் ஏற்படும் மாற்றம் (தாமிரத்தின் பருமக் குணகம் $1.25\times10^{11}Nm^{-2}$)**

(1) $1.024\times10^{-4}m^{3}$ (2) $1.024\times10^{-8}m^{3}$

(3) $3.024\times10^{-8}m^{3}$ (4) $1.024\times10^{-3}m^{3}$

**02. ஒரு பொருளின் மீது செயல்படும் தகைவுக்கும் அதில் ஏற்படும் திரிபுக்கும் உள்ள தகவு**

(1) விறைப்புக் குணகம் எனப்படுகிறது

(2) யங் குணகம் எனப்படுகிறது

(3) பரும குணகம் எனப்படுகிறது

(4) ஹூக்கின் குணகம் எனப்படுகிறது

**03. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு**

**(a)** உருக்குலைந்த பொருளின் ஓரலகு பரப்பில் செயற்படும் மீள்விசை, திரிபு எனப்படும்.

**(b)** ஒரு பொருளில் ஏற்பட்ட பரிமாண மாற்றத்திற்கும் அதன் தொடக்க நிலைப் பரிமாணத்திற்கும் இடையேயான தகவு தகைவு எனப்படுகிறது.

**(c)** இரு ஒத்த அளவுகளின் தகவாயிருப்பதனால், திரிபுக்கு அலகு கிடையாது.

**(d)** நிரந்தர உருக்குலைவு ஏற்படும் எல்லை மீட்சி எல்லை என அழைக்கப்படுகிறது.

**ஆப்ஷன் :**

(1) (a), (b) மற்றும் (c) தவறு

(2) (b), (c) மற்றும் (d) தவறு

(3) (a) மட்டும் தவறு

(4) (a) மற்றும் (b) தவறு

**04. வில்லாக வளைக்கப்பட்ட செவ்வக பாளத்தில் ஏற்படும் திரிபு**

(1) அழுக்கம்

(2) விரிவு

(3) விரிவும், அழுக்கம்

(4) விரிவும் அல்ல, அழுக்கம் அல்ல

**05. ஒரு திண்மப் பொருளின் திரிபு கண்டறிய உதவும் வாய்ப்பாடு தகைவிற்கான வாய்ப்பாடு**

(1) ______

(2) $\frac{\text{பரிமாணத்தில் மாற்றம்}}{\text{தொடக்க நிலைப் பரிமாணம்}}$

(3) $\frac{\text{நீளத்தில் மாற்றம்}}{\text{தொடக்க நீளம்}}$

(4) மேற்கண்ட எதுவுமில்லை

**06. ஒரு திண்மப் பொருளின் யங் குணகம் கண்டறிய உதவும் வாய்ப்பாடு**

(1) $\frac{/}{/}$ (2) $\frac{-}{\;}$

(3) $\frac{}{\theta}$ (4) மேற்கண்ட எதுவுமில்லை

**07. ஓர் இரப்பர் பந்தை கடினப்பரப்பின் மீது போட்டால் அது மேலே எழும்பக் காரணம்**

(1) மீட்சியல் விசைகள்

(2) துளைத்துக் கொண்டு உள்ளே செல்ல முடியாததால்

(3) பூமி விலக்குகிறது

(4) (1) மற்றும் (2) சரி

**08. ஒரு திண்மப் பொருளின் தகைவினை கண்டறிய உதவும் வாய்ப்பாடு தகைவிற்கான வாய்ப்பாடு**

(1) ______

(2) $\frac{\text{பரிமாணத்தில் மாற்றம்}}{\text{தொடக்க நிலைப் பரிமாணம்}}$

(3) $\frac{\text{நீளத்தில் மாற்றம்}}{\text{தொடக்க நீளம்}}$

(4) மேற்கண்ட எதுவுமில்லை

09. ஒரு பித்தளைத் தண்டின் விட்டம் 4 mm ஆகும். அதன் நீளத்தில் 0.25% நீட்சியடையச் செய்யப்பட்டால், அதன் தகைவு, திரிபு மற்றும் செயல்படும் விசையின் மதிப்பு முறையே (பித்தளையின் $q = 9.2\times10^{10}\,Nm^{-2}$ )

(1) $2.3\times10^{-5}Nm^{-2}, 2.5\times10^{-3}, 2.3\times10^{-3}Nm^{-2}$

(2) $2.3\times10^{-3}Nm^{-2}, 2.5\times10^{-3}, 2.3\times10^{-3}Nm^{-2}$

(3) $5.3\times10^{-3}Nm^{-2}, 2.5\times10^{-3}, 2.3\times10^{-3}Nm^{-2}$

(4) $2.3\times10^{-3}Nm^{-2}, 1.5\times10^{-3}, 2.3\times10^{-3}Nm^{-2}$

10. கம்பி குறுக்கதிர்வடையும் போது அதன் அதிர்வு எண்ணிற்கு நேர் விகிதத்திலிருப்பது.

(1) அதன் நீளம்

(2) அதன் ஓரலகு அடர்த்தி

(3) அதன் இழுவிசை

(4) இவற்றுள் எதுவுமில்லை

11. ஒரு திண்மப் பொருளின் நீட்சித் திரிபு கண்டறிய உதவும் வாய்ப்பாடு தகைவிற்கான வாய்ப்பாடு

(1) ______

(2) $\frac{\text{பரிமாணத்தில் மாற்றம்}}{\text{தொடக்க நிலைப் பரிமாணம்}}$

(3) $\frac{\text{நீளத்தில் மாற்றம்}}{\text{தொடக்க நீளம்}}$

(4) மேற்கண்ட எதுவுமில்லை

12. திரிபு–ன் அலகு

(1) $N\,m^{1}$

(2) $N\,m^{2}$

(3) $N\,m^{3}$

(4) அலகு கிடையாது

13. 2.5 mm விட்டம் கொண்ட ஒரு கம்பியானது 980 N விசையால் நீட்டப்படுகிறது. கம்பியின் யங் குணகம் $12.5\times10^{10}\,Nm^{-2}$ எனில் கம்பியின் அதிகரித்த நீளத்தின் சதவிகிதம்

(1) 0.016% (2) 0.66%

(3) 0.16% (4) 0.76%

14. பாகியல் எண்ணின் அலகு

(1) நி. நொ. மீ.$^{-2}$

(2) நி. நொ. மீ.

(3) நி. நொ.$^{-1}$ மீ.$^{-2}$

(4) இவற்றுள் ஏதுமில்லை

15. கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு

(a) நிலையான பொருளின் மீது புறவிசை (external force) ஒன்றைச் செயற்படுத்தினால், துகள்களின் இடையே சார்பு இடப்பெயர்ச்சி ஏற்படும்.

(b) மீட்சிப் பண்பின் காரணமாக துகள்கள் அவற்றின் தொடக்கநிலையை அடைய முற்படுகின்றன.

(c) புறவிசையானது பொருளின் நீளம், பருமன் மற்றும் வடிவத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை.

(d) மாற்றங்களை ஏற்படுத்தக்கூடிய புறவிசை உருக்குலைவிக்கும் விசை (deforming forces) என்று அழைக்கப்படுகிறது.

ஆப்ஷன் :

(1) (a), (b) மற்றும் (c) தவறு

(2) (b), (c) மற்றும் (d) தவறு

(3) (c) மட்டும் தவறு

(4) (a), (b) மற்றும் (d) தவறு

16. ஒரு திண்மப் பொருளின் விறைப்புக் குணகம் கண்டறிய உதவும் வாய்ப்பாடு

(1) $\frac{l}{l}$ (2) $\frac{-}{\ }$

(3) $\frac{\ }{\theta}$ (4) மேற்கண்ட எதுவுமில்லை

17. கீழ்க்கண்டவைகளில் எதற்கு மீட்சித் தன்மை மிகவும் அதிகம்?

(1) எஃகு (2) ரப்பர்

(3) அலுமினியம் (4) தாமிரம்

**18.** கொடுக்கப்பட்ட கூற்றுகளை ஆராய்ந்து சரியான விடையை தேர்ந்தெடு

**(a)** 1676–ஆம் ஆண்டு பிரிட்டிஷ் இயற்பியலாளர் இராபர்ட் ஹூக் (1635–1703) என்பவர், ஒரு கம்பியின் நீட்சிக்கும் (extension) அதில் ஏற்படும் மீள் விசைக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கினார்.

**(b)** ஹூக் விதியின்படி, மீட்சி எல்லைக்குள் ஒரு பொருளின் திரிபானது அதை ஏற்படுத்தக்கூடிய தகைவுக்கு நேர்த்தகவில் உள்ளது.

**(c)** மீட்சிக் குணகத்தின் அலகு $N\ m^{-1}$ ஆகும்.

**(d)** மீட்சிக் குணகத்தின் பரிமாண வாய்ப்பாடு $ML^{-2}T^{-2}$ ஆகும்.

**ஆப்ஷன் :**

(1) (a), (b) மற்றும் (c) தவறு

(2) (c) மற்றும் (d) தவறு

(3) (a) மட்டும் தவறு

(4) (a), (b) மற்றும் (d) தவறு

**19.** தகைவின் பரிமாண வாய்ப்பாடு

(1) $ML^{-1}T^{-1}$ (2) $ML^{-1}T^{-3}$

(3) $ML^{-1}T^{-2}$ (4) மேற்கண்ட எதுவுமில்லை

**20.** ஒரே பொருளால் இரண்டு கம்பிகள் செய்யப்படுகின்றன. முதல் கம்பியின் நீளம் இரண்டாம் கம்பியின் நீளத்தைப்போல் பாதியும், அதன் விட்டம் இரண்டாம் கம்பியின் விட்டத்தைப்போல் இரு மடங்கு ஆகும். சம எடைகள் இரண்டு கம்பிகளிலும் பொருத்தப்பட்டால், அவற்றின் நீட்சியின் தகவு

(1) 1:8 (2) 2:8

(3) 2:4 (4) 1:16

| இயற்பியல் அலகுத்தேர்வு 09–க்குரிய விடைகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01**...(2) | **02**...(2) | **03**...(4) | **04**...(3) | **05**...(2) | **06**...(1) | **07**...(4) | **08**...(1) |
| **09**...(2) | **10**...(3) | **11**...(3) | **12**...(4) | **13**...(4) | **14**...(1) | **15**...(3) | **16**...(3) |
| **17**...(1) | **18**...(2) | **19**...(3) | **20**...(1) | | | | |

## குறிப்புகள் மற்றும் விளக்கமான விடைகள் (இயற்பியல் அலகுத்தேர்வு–09)

01. தாமிரக் கனசதுரத்தின் பக்கம்

$= 40\ mm = 40\times10^{-3}\ m = 4\times10^{-2}\ m$

கன சதுரத்தில் ஏற்படும் அழுத்தம், $P = 2\times10^{7}\ Pa$

தாமிரத்தின் பருமக் குணகம் $k = 1.25\times10^{11}\ Nm^{-32}$

கன சதுரத்தின் கன அளவு

$V = (4\times10^{-2})^3\ m^3 = 64\times10^{-6}\ m^3$

$k = - \frac{}{}\qquad 1.25\times10^{11} = -\frac{2\times10^{7}\times64\times10^{-6}}{}$

$$dV = \frac{2\times10^{7}\times64\times10^{-6}}{1.25\times10} = \frac{128}{}\times10^{-8}$$

$= 1.024\times10^{-8}\ m^3$

பருமனில் ஏற்படும் மாற்றம் $dV = 1.024\times10^{-8}\ m^3$

03. (a) உருக்குலைந்த பொருளின் ஓரலகு பரப்பில் செயற்படும் மீள்விசை, தகைவு எனப்படும்.

(b) ஒரு பொருளில் ஏற்பட்ட பரிமாண மாற்றத்திற்கும் அதன் தொடக்க நிலைப் பரிமாணத்திற்கும் இடையேயான தகவு திரிபு எனப்படுகிறது.

09. பித்தளைத் தண்டின் விட்டம் $= 4\ mm = 4\times10^{-3}\ m$

பித்தளைத் தண்டின் ஆரம் $r = 2\times10^{-3}\ m$

பித்தளைத் தண்டின் நீளம் $= l\ m$

பித்தளையின் யங் குணகம் $q = 9.2\times10^{10}\ Nm^{-2}$

தண்டு அடைந்த நீட்சி $dl = 0.25\%\times l = 25\,l\times10^{-4}$

தண்டில் அளிக்கப்பட்ட விசை $= F\ N$

தண்டு குறுக்குவெட்டுப்பரப்பு,

$A = \pi r^2 = 3.14\times(2\times10^{-3})^2$

$= 1.256\times10^{-6}\ m^2$

தண்டின் திரிபு $= \frac{dl}{} = \frac{25l\times10^{-4}}{} = 2.5\times10^{-3}$

$q = \frac{F/A}{dl/l}$ $\quad F = q \frac{}{} \times A$

$F = 9.2 \times 10^{10} \times 2.5 \times 10^{-3} \times 1.256 \times 10^{-6}$

$= 288.9 \times 10 = 2.889 \times 10^{-3} N$

தண்டில் செயல்படும் தகைவு $= \frac{F}{} = \frac{2.889 \times 10^{-3}}{1.256 \times 10^{-6}}$

$= \frac{2.889}{1.256} = 2300 = 2.3 \times 10^{-3} N\,m^{-2}$

பித்தளைத் தண்டின் தகைவு $= 2.3 \times 10^{-3} N\,m^{-2}$

பித்தளைத் தண்டின் திரிபு $= 2.5 \times 10^{-3}$

பித்தளைத் தண்டில் செயல்படும் விசை

$= 2.3 \times 10^{-3} N\,m^{-2}$

13. கம்பியின் விட்டம் = 2.5 mm

கம்பியின் ஆரம்

$r = 2.5/2 = 1.25$ mm $= 1.25 \times 10^{-3}$ m

கம்பியின் தொடக்க நீளம் = 1 m

கம்பியில் அளிக்கப்பட்ட விசை, F = 980 N

கம்பியின் அதிகரித்த நீளம் = dl m

கம்பியின் யங் குணகம் $q = 12.5 \times 10^{10} N\,m^{-2}$

$q = \frac{F/\pi r}{dl/l} = \frac{Fl}{\pi r\ .dl}$

$12.5 \times 10^{10} = \frac{980 \times 1}{3.14 \times (1.25 \times 10^{-3})^2 \times dl}$

$\frac{}{} = \frac{980}{3.14 \times (1.25)^2 \times 10^{-6} (12.5) \times 10^{10}}$

$\frac{}{} = \frac{98 \times 10^{-4}}{3.14 \times (1.25)^3} = 15.98 \times 10^{-4}$

கம்பியின் அதிகரித்த நீளம்

$= 15.98 \times 10^{-4} \times 100 = 0.16\%$

கம்பியின் அதிகரித்த நீளம் விழுக்காட்டில் = 0.16%

15. (c) புறவிசையானது பொருளின் நீளம், பருமன் மற்றும் வடிவத்தில் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

18. (c) மீட்சிக் குணகத்தின் அலகு $N\,m^{-2}$ ஆகும்.

(d) மீட்சிக் குணகத்தின் பரிமாண வாய்ப்பாடு $ML^{-1}T^{-2}$ ஆகும்.

20. இரண்டாம் கம்பியின் விட்டம் = 2r m

இரண்டாம் கம்பியின் ஆரம் $r_2 = r$ m

முதல் கம்பியின் விட்டம் = 4r m

முதல் கம்பியின் ஆரம் $r_1 = 2r$ m

கம்பியில் அளிக்கப்பட்ட விசை = F N

இரண்டாம் கம்பியின் நீளம், $l_2 = l$ m

முதல் கம்பியின் நீளம் $l_1 = 1/2$ m

முதல் கம்பியின் அதிகரித்த நீளம் = 1/2 m

முதல் கம்பியின் அதிகரித்த நீளம் $= dl_1$ m

இரண்டாம் கம்பியின் அதிகரித்த நீளம் $= dl_2$ m

கம்பிகளின் யங் குணகம் $= q\,N\,m^{-2}$

$q = \frac{F/A}{dl/l} = \frac{}{\pi r\ \ dl} = \frac{}{\pi r\ \ dl}$

$q = \frac{l/2}{(2r)\ dl} = \frac{l}{r\ dl}$

$\frac{}{} = \frac{}{} \quad dl_1 : dl_2 = 1:8$

இரு கம்பிகளின் நீட்சிகளிடையே உள்ள தகவு = 1:8

# இயற்பியல் அலகுத் தேர்வு-10

## திரவங்களின் எந்திரவியல் பண்புகள்

வினாக்களின் எண்ணிக்கை: 20] [அதிகபட்ச நேரம் : 30 நிமிடங்கள்

01. 800 $km^{-3}$ அடர்த்தி கொண்ட நீர்மத்தில் 0.01 m ஆரம் கொண்ட ஒரு காற்றுக் குமிழி $5\times10^{-3}$ சீரான வேகத்தில் மேல்நோக்கிச் செல்கிறது எனில் நீர்மத்தின் பாகியல் எண் (காற்றின் அடர்த்தியைத் தவிர்த்திடுக)
(1) 24.84 $Nsm^{-2}$ (2) 31.84 $Nsm^{-3}$
(3) 54.84 $Nsm^{-4}$ (4) 34.84 $Nsm^{-2}$

02. ஒரு திரவத்தின் பரப்பு இழுவிசை, அதன் வெப்பநிலையை அதிகரிக்கையில்
(1) அதிகமாகும்
(2) குறையும்
(3) மாறாது நிலையாகும்
(4) இவற்றுள் எதுவுமில்லை

03. 0.02 m ஆரம் கொண்ட வட்டமான தட்டொன்றை நீரின் மேற்பரப்பிலிருந்து அகற்றுவதற்குத் தேவைப்படும் விசை
(நீரின் பரப்பு இழுவிசை 0.07 $Nm^{-1}$)
(1) $8.792\times10^{-5}$N (2) $3.792\times10^{-3}$N
(3) $5.712\times10^{-5}$N (4) $8.792\times10^{-3}$N

04. ஒரு கப்பல், அரபிக் கடலிலிருந்து இந்துமாக்கடலில் செல்லும்போது, அதன் அமிழும் ஆழம் மாறுபடுவது
(1) அழுத்த வேறுபாட்டால்
(2) கப்பலின் எடை வேறுபாட்டால்
(3) திசை மாறுபாட்டால்
